விண்ணப்பங்களுக்கு அழைப்பு

# இந்தியாவில் தூத்துக்குடியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை தகவல்தொடர்பாளர்களுக்கான பயிலரங்கு

**வெளியீடு**: செப்டம்பர் 5, 2023

**விண்ணப்ப காலக்கெடு:** செப்டம்பர் 18, இரவு 11:59 மணி வரை, ஆசியா/கொல்கத்தா (இந்திய நேரம்)

இங்கு விண்ணப்பியுங்கள்

விண்ணப்பங்களுக்கான அழைப்பு: தமிழிலும் கிடைக்கிறது

**Internews அமைப்பின் Earth Journalism Network (EJN) தூத்துக்குடியில் 2023ஆம் ஆண்டு அக்டோபர் 25 முதல் 27 வரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் தகவல் தொடர்பாளர்களுக்கான பயிலரங்கு ஒன்றை நடத்த இருக்கிறது. இதில் பங்குபெற தமிழ்நாட்டைச் சேர்ந்த தகவல் தொடர்பாளர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இந்த பயிலரங்கு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமானது ஆகும்.**

இந்தியா தனது ஆற்றல் தேவைகளில் 50 சதவிகிதத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றலை கொண்டு பூர்த்தி செய்ய உறுதிபூண்டுள்ளது. எதிர்கால கார்பன் உமிழ்வை ஒரு பில்லியன் மெட்ரிக் டன்கள் குறைப்பது மற்றும் 2030க்குள் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் உருவாகும் உமிழ்வை 45% குறைப்பது மூலமும் இதனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையிலும் அதற்கான மாற்றத்திலும் முன்னணியில் இருக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவதற்கான இந்த இலக்குகள் பற்றியும்; இந்தியாவின், குறிப்பாக தமிழ்நாட்டின், ஆற்றல் திட்டமிடலில் இன்றுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு EJN தகவல் தொடர்பாளர்களுக்கு இந்த மூன்று நாள் பயிலரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இந்த பயிலரங்கின் அமர்வுகள் ஒவ்வொன்றும், புதுப்பிக்கத்தக்க

எரிசக்தி துரையின் சிக்கல்கள் பற்றி ஆய்வு செய்வது, அறிக்கை தயாரிப்பது போன்றவற்றில் தகவல் தொடர்பாளர்களின் திறன்களை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் EJN தகவல்தொடர்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், துறை வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையேயான உரையாடலை எளிதாக்குகிறது. இந்தியா மற்றும் குறிப்பாக தமிழ்நாடு அதன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் சதவீதத்தை அதிகரிக்க பாடுபடுவதால், எதிர்காலத்தில் உள்ள வாக்குறுதிகள் மற்றும் தடைகள் பற்றிய அறிவைப் பெறுவதற்கும், ஆழமான புரிதலுக்கும் இந்த பயிலரங்கு வாய்ப்பளிக்கும்.

பயிலரங்கம் 2023ஆம் ஆண்டு அக்டோபர் 25 முதல் 27 வரை தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் நடைபெறும்.

செய்தித்தாள், நாழிதல்/மாதஇதழ்கள், ஆன்லைன், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களின் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த தகவல் தொடர்பாளர்களுக்கு விண்ணப்பங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்களின் பயணம், தங்குமிடம் மற்றும் உணவுக்கான செலவுகளை பயிலரங்கை நடத்துவோரே வழங்குவர் .
- இந்த பயிலரங்கில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் நடைமுறையில் உள்ள இடத்திற்கு களப்பயணமாக அழைத்து செல்லப்படுவர்.
- குறிப்பாக பெண்கள் மற்றும் தங்கள் துறையில் ஆரம்ப மற்றும் நடுத்தர நிலையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கிறோம்.

## <u>தகுதி</u>

விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக,

- பட்டறையின் அனைத்து நாட்களும் கலந்துகொள்ள வேண்டும்.
- அறிவியல் மற்றும்/அல்லது சுற்றுச்சூழல் சார்ந்த தலைப்புகளில் பணியாற்றிய அனுபவங்கள் இருக்க வேண்டும்.
- ஆங்கிலம் மற்றும்/அல்லது தமிழில் புரிந்துகொண்டு, தொடர்புகொள்ள முடியவேண்டும்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த துறையில் ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும்.

- பயிலரங்கில் பங்கேற்றதன் விளைவாக எந்தவொரு புதிய வெளியீட்டை செய்தாலும் அதனை பயிலரங்கு அமைப்பாளர்கள் மறுபிரசுரம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

## எப்படி விண்ணப்பிப்பது

- இந்த பக்கத்தின் துவக்கத்தில் உள்ள 'இங்கு விண்ணப்பியுங்கள்' பொத்தானைக் கிளிக் செய்யவும்.
- உங்களிடம் ஏற்கனவே இங்கு கணக்கு இருந்தால், விண்ணப்பிக்க நீங்கள் 'Log in' செய்ய வேண்டும். எங்கள் இணையதளத்தை நாங்கள் சமீபத்தில் புதுப்பித்ததால், "கடவுச்சொல்லை மறந்துவிட்டீர்களா?" என்பதைக் கிளிக் செய்து உங்கள் கடவுச்சொல்லை மீட்டெடுக்க வேண்டியிருக்கும்.
- உங்களிடம் கணக்கு இல்லையென்றால், பக்கத்தின் மேல் வலதுபுறத்தில் உள்ள "Log in" என்பதைக் கிளிக் செய்து பதிவுசெய்து, தொடர்ந்து வரும் பக்கத்தின் கீழே உள்ள "Sign in" இணைப்பைக் கிளிக் செய்யவும்.
- ஒரு கணக்கை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிய விரிவான வழிமுறைகளுக்கு இங்கே கிளிக் செய்யவும், மேலும் உங்கள் கடவுச்சொல்லை எவ்வாறு மீட்டமைப்பது என்பது பற்றிய விரிவான வழிமுறைகளுக்கு இங்கே கிளிக் செய்யவும்.
- நீங்கள் விண்ணப் படிவத்தை தொடங்கியா பின், எதேனும் சிக்கல் வந்து பின்னர் முடிக்க விரும்பினால், 'Save Draft' என்பதைக் கிளிக் செய்யலாம். வரைவுக்குத் திரும்ப, நீங்கள் மீண்டும் Opportunity பக்கத்திற்கு சென்று விண்ணபத்தை முடிக்க மீண்டும் 'இங்கு விண்ணப்பியுங்கள்' என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.
- பணியில் இருப்போர் தாங்கள் பணிபுரியும் இடத்தில், தங்கள் வருகையை அங்கீகரித்து உங்களது மேற்பார்வையாளரிடமிருந்து ஒரு அனுமதி கடிதத்தை வாங்கி வரவேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தங்களது இரண்டு பிரசுரிக்கபட்ட மாதிரிகள் அல்லது ஆன்லைன் இணைப்புகளை சமர்ப்பிக்க வேண்டும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரச்சினைகள் தொடர்பான பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் வரவேற்கப்படும்.

உங்கள் விண்ணபத்தை சமர்ப்பிப்பதில் உங்களுக்கு சிரமங்கள் அல்லது கேள்விகள் இருந்தால், info.ejn@internews.org-க்கு மின்னஞ்சல் செய்யவும். இதனைப் பற்றி வேறு எந்த Internews மின்னஞ்சலையும் தொடர்பு கொள்ள வேண்டாம், அவை இதற்கான பயன்பாட்டில் இல்லை.

காலக்கெடுவிற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

தமிழ் விண்ணப்பங்களுக்கு